# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

# 1983 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கத்திகள் (திருத்தச்) சட்டம்

*[1983, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1983, சனவரி மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 35* *தபாற் செலவு : சதம் 50*

# 1983 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கத்திகள் (திருத்தச்) சட்டம்

[1983, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 113/78
1191

கத்திகள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கத்திகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

27 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் கத்திகள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"தடைசெய்யப்பட்ட கத்திகளைத் தரித்தல் முதலியனவற்றுக்கான தண்டம்.

3. தடைசெய்யப்பட்ட ஏதேனும் கத்தியைத் தமது உடலில் அல்லது உடலின்மீது கொண்டுதிரிகின்ற, அல்லது தரிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அதற்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒருமாத காலத்தை விஞ்சாத காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும் என்பதுடன், இரண்டாவது தவறுக்கும் அதற்குப் பின்னரான ஏதேனும் தவறுக்கும் மூன்றுமாத காலத்தை விஞ்சாத காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இப்பிரிவின்கீழான ஒவ்வொரு குற்றவழக்கிலும் அத்தகைய ஆள் தடைசெய்யப்பட்ட எந்தக் கத்தி தொடர்பில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ அந்தக் கத்தி பறிமுதலாக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"தவறுகளை விளங்குவதற்கான நீதிமன்றம்.

7. இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கெதிராக புரியப்பட்டதெனச் சார்த்தப்பட்ட தவறு ஒவ்வொன்றும் இட நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும்.".

2—அ 63895—6,925 (06/82)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

“ இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தவறுளர்களை கண்டிப்புடன் அல்லது நிபந்தனையின்மீது விட்டு விடுதலாகாது.

8. இக்கட்டளைச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கு 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவில் இருந்து 309 ஆம் பிரிவு வரையான (இரண்டும் உட்பட) ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகா.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

“ குற்றவழக்குகளுக்கான காலவரையறை.

10. இக்கட்டளைச்சட்டத்துக்கெதிரான ஒரு தவறு புரியப்பட்டதெனச் சார்த்தப்பட்ட நேரத்திலிருந்து மூன்று மாதகாலம் கழிந்தபின்னர் அத்தவறுக்கென எவரேனும் ஆளுக்கெதிராகக் குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.”.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ., இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.